விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 359 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 27 வியாழக்கிழமை (12.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழில் பரவி வரும் இனந்தெரியாத மர்மக் காய்ச்சலால் 7 பேர் மரணம்

### இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழில் பரவி வரும் இனந்தெரியாத மர்மக் காய்ச்சலால் 6 பேர் மரணமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் இரத்தமாதிரிகள் அனைத்தும் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 20 முதல் 65 வயதுக்குட்பட்ட, காய்ச்சல் மற்றும் சுவாசச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இந்த நோய் பொதுவாக எலிக் காய்ச்சல் எனப்படும் லெப் 15

## மர்மக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த தேவையான ஆளணியை பெற்றுப் பயன்படுத்துக

### சுகாதாரப் பணிப்பாளருக்கு ஆளுநர் ஆலோசனை


(யாழ்ப்பாணம்)

யாழில் அடையாளம் தெரியாத மர்மக் காய்ச்சலைக் கட்டுப்படுத்த தேவையான ஆளணியைப் பெற்றுப் பயன்படுத்துமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனுக்கு வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் 15

## முன்னாள் கிராம சேவகர் யானை தாக்கியதில் பலி

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)



வவுனியா, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கி முன்னாள் கிராம சேவகர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

# யாழில் பரவும் மர்மக் காய்ச்சல்



### அவதானமாக இருக்குமாறு தொற்று நோய் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

யாழில் இனங்காணப்படாத மர்மக் காய்ச்சல் பரவி வருவதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு தொற்றுநோயியல் திணைக்களத்தின் மருத்துவர் குமுது வீரகோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஆவரங்காலில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(ஆவரங்கால்)

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் சந்திப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இராஜவீதி தோப்பு அச்சுவேலியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கைந் 15

## யாழில் மீள்குடியேற்றம் எவ்வாறு உள்ளது?

### யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் பிரித்தானியத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)



யாழின் மீள்குடியேற்ற நிலைவரங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட பிரதி அரசாங்க 02

## நிதி மோசடி கோண்டாவிலில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

தளபாடங்களைத் தருவதாகக் கூறி பெருமளவான நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது 15

## நயினாதீவு, நெடுந்தீவுக்கான படகு சேவைகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்கான படகுச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடல் கடும் கொந்தளிப்பாக இருப்பதனால், படகுச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

படகுச் சேவைகள் ஆரம்பமாகும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ரூ.130 மில்லியன் பெறுமதியான போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கஹதுடுவ பகுதியில் 05 கிலோ ஹெரோயின், 1.6 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 800 எக்ஸ்டஸி மாத்திரைகளை வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதியானது சுமார் 130 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பொரளை, வனத்தமுல்ல பிரதேசத்தில் 02 கிலோ 100 மில்லி கிராம் ஐஸ்போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லேரியப் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் மக்களிடம் நடந்து கொள்ள வேண்டும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

பாடசாலை மாணவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதிகாரிகள் பொதுச் சேவைகளை வழங்குபவர்கள் என்ற வகையில் பொதுமக்களுடன் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

"தற்போதைய கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்களை வகுத்தல்" என்ற தலைப்பில் கொழும்பு இலங்கை மன்றத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

கல்வி என்பது மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அறிவைப் பெறுவதற்கு அப்பால், தனிப்பட்ட மற்றும் ஒரு கூட்டு மாற்றமாக ஒரு சமூக மாற்றம் நிகழ வேண்டும். அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கல்வி முறையை நாம் கொண்டிருக்க வேண்டும்.

அதன் மூலம் உலகை வெற்றிகொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை பிள்ளைகள் பார்க்க முடியுமாக இருக்க வேண்டும். சமூகப் பொறுப்பை உணர வேண்டும். தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி, ஒரு சமூகமாகவும் எழுச்சிபெற வேண்டும். அதற்கான சமூகப் பொறுப்பு உள்ளது என்பதை உணர வேண்டும். அதன் மூலம் அறிவையும் திறமையையும் பெற வேண்டும்.

கல்வி ஒரு வர்த்தகப் பண்டம் அல்ல. நாம் கல்வியை ஒரு வர்த்தக பண்டமாக மாற்றியுள்ளோம். இந்த கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்றார்.(ம-7)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. சிங்காரவேலு யோகநாதன்

( உரிமையாளர் – Ogesta )

திதி - துவாதசி

தோற்றம் : 24.02.1957 மறைவு : 01.12.2017

ஆண்டுகள் ஏழு கடந்ததுவோ
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதப்பா
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

(2742)

185/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

021 221 6742

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## இரணைமடுக்குளத்தின் 2 வான் கதவுகள் திறப்பு

### தாழ் நிலப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் தொடர்ச்சியான மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகிறது. ஏற்கனவே வான் பாய்ந்த சிறிய குளங்கள் மீண்டும் வான் பாய ஆரம்பித்துள்ளன.

இரணைமடுக்குளத்தின் 14 வான் கதவுகளில் இரண்டு வான் கதவுகள் 6இஞ்சி அளவில் நேற்று மாலை திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே தாழ் நிலப் பகுதி மக்களைத் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.(ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு 01 - 12 - 1934



உதிர்வு 11 - 12 - 2024

## திருமதி குணஞானவதி குலசிங்கம்

(இளைப்பாறிய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் – யாழ். போதனா வைத்தியசாலை)

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணஞானவதி குலசிங்கம் நேற்று புதன்கிழமை 11.12.2024 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவஞானவதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா குலசிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர் திரு. கு. ராஜ்குமார், திருமதி ந. ஷகீலா (கனடா) டாக்டர் கு. சுரேஷ்குமார்(மகப்பேறு பெண் நோயியல் வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சு.நகுலேந்திரன் (கனடா), திருமதி சு. வாசுகி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் தி.குகஞானவதி, திருமதி ம. குலஞானவதி (கனடா), திருமதி சி. செந்தில்ஞானவதி (கனடா) அமரர் திருமதி இ.கெயன்ஞானவதி (கனடா), திருமதி ச. மகாஞானவதி (வவுனியா), மற்றும் அமரர் திரு. குகஞானலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வன் நிகாஷ் (கனடா), செல்வி ந. ராகவி (கனடா), செல்வி சு. துவாரகி, செல்வி சு.மயூரகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.12.2024 வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் அன்னாரில் "கொக்குவில்" இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 15, செம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(2740)

தகவல் : குடும்பத்தினர்
0777 256 683/ 077 3754 896

## யாழில்...

அதிபரிடம் கேட்டறிந்தார் பிரித்தானிய தூதுவர்.

பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி நேற்று புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பிரதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை மாவட்ட செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகளுக்கு தேவையான வைத்திய உபகரணங்களின் தேவைப்பாடுகள் உள்ளதாகவும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் பிரதி அரசாங்க அதிபர் கோரிக்கையினை முன்வைத்தார்.

மேலும், இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் முதன்மைச் செயலாளர் வினாவிய போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வார காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத்தில் ஏற்படாவண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசியம் பற்றி தெரிவித்த பிரதி அரசாங்க அதிபர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் இதுவரை ரூபா.50 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டது எனவும் இதில் சமைத்த உணவு வழங்கல் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம் என்பவற்றிற்காக ரூபா 49 மில்லியன் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், ரூபா 1 மில்லியன் உடனடி அனர்த்த தணிப்பு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்ததுடன், எமது அரசாங்கத்திடம் மாவட்டத்திற்கான தேவைப்பாடுகளை முன்வைத்த போது, நாம் கோரிய நிதி ஒதுக்கீட்டினை சம்பந்தப்பட்ட அமைச்சு விரைவாக விடுவித்தமையானது மகிழ்ச்சியான விடயம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற நிலவரங்கள், அஸ்வெசுமத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விபரங்களை பிரதி அரசாங்க அதிபரிடம் முதன்மைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் பிரதி அரசாங்க அதிபர் குறிப்பிட்டதுடன் மேலும், மீள் குடியேற்ற வேலைத்திட்டங்கள் முன்னேற்றகரமாக நடைபெற்று வருவதாகவும், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணியற்ற குடும்பங்களுக்கு காணி அரசாங்கத்தின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன், ஒரு நலன்புரி நிலையத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்களே தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இம் மாத இறுதிக்குள் அவ் ஒரேயொரு நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரித்தானிய தூதரகத்தின் அலுவலர் செல்வி. ப்ராக் வேர்தூஸ் அவர்களும் உடனிருந்தார். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பரவும் மர்மக் காய்ச்சல்!



## எலிக்காய்ச்சலாக இருக்கலாம் என அச்சம்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது.**

இக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களும், மொத்தமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக்காய்ச்சலாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. இக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராகக் காணப்படுகின்றனர். இறந்தவர்களின் எல்லோரதும் இறப்புக்களும் சுவாசத் தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

எலிக்காய்ச்சலானது மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந்நோய்க் கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொது மக்களுக்கு இந்த வெள்ள நீருடன் தொடுகை ஏற்படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்டத் தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக்கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகு வதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களைப் பின்பற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

1.காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டுத் தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

2.தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

3.தற்போதைய காலப் பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

4.வயல்கள் சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ள வேண்டும். கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

5.கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப்பருகவும்.

6.வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.

7.தற்போதைய காலப் பகுதியில் வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

8.தற்போது நோய் பரவி வரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளைப் பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

# 33 சதவீதத்தால் மின்கட்டணம் குறையும்

## எமது நிலைப்பாடு மாறாது என்கிறார் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

மின் கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியும் என்ற எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்சாரசபை ஊழியர்களுக்கு எவ்வித விசேட கொடுப்பனவையும் வழங்காமலிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம்.

கடந்த அரசாங்கத்தால் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் தொடர்பான தரவினை அடிப்படையாகக் கொண்டே நாம் அந்த கருத்தினை முன்வைத்தோம்.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்பின்னர் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

நாம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற போது இலங்கை மின்சாரசபையில் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் பாரிய தொகை செலவிடப்பட்டிருந்தது.

எனவே தற்போது மின் கட்டணத்தை அதிகரிக்காமல் பேணுவதற்கான நடவடிக்கைகளையே மின்சார சபை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார். (நி-8)

# புத்தக விற்பனையில் வீழ்ச்சி!

## வற் வரியை விலக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)



நாட்டில் புத்தகங்கள் விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கத்தின் செயலாளர் தினேஷ் குலதுங்க தெரிவித்துள்ளார்.

புத்தகங்கள் மீது வற் வரி விதிக்கப்பட்ட காரணத்தினால் இவ்வாறு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

புத்தகங்களின் விற்பனை சுமார் 30 வீதத்தினால் வீழ்ச்சி யடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் புதிதாக புத்தகங்கள் வெளியீடு செய்யப்படுவதும் குறைந்துள்ளது என தினேஷ் குலதுங்க தெரிவித்துள்ளார்.

சில பதிப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் நன்றாக விற்பனை செய்யப்பட்ட புத்தகங்கள் தற்பொழுது மீள் பிரசுரத்திற்காக அச்சிடப்படுவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

வற் வரியிலிருந்து புத்தகங்களுக்கு விலக்கு அளிக்குமாறு கோரிக்கை விடுக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் இந்த யோசனையை உள்ளடக்குமாறு கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புத்தகங்கள் அச்சிடுவதற்கான அனைத்து மூலப் பொருட்களும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகவும் அதற்கான வரிகள் செலுத்தப்படுவதாகவும், அதற்கு மேலதிகமாக வற் வரியை விதிப்பது நியாயமற்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## புங்குடுதீவு சன்னிஸ்ரார் இறுப்பிட்டி A அணிகள் இறுதிக்குள்







புங்குடுதீவு இறுப்பிட்டி சன சமூக நிலையம் தமது பவள விழாவை முன்னிட்டு நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு சன்னிஸ்ரார் அணி மற்றும் இறுப்பிட்டி ஏ. அணிகள் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

புங்குடுதீவு இறுப்பிட்டி சன சமூக நிலைய பவள விழாவை முன்னிட்டு நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் புங்குடுதீவு பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சன்னிஸ்ரார் அணியை எதிர்த்து நண்பர்கள் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சன்னிஸ்ரார் அணி 18:4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

அடுத்து நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இறுப்பிட்டி ஏ அணியை எதிர்த்துக் காந்தி அணி மோதியது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் இறுப்பிட்டி ஏ அணி 11:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

## ஆசியமட்ட பளுதூக்கலில் யாழ். இளைஞன் சாதனை



ஆசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட ச.புசாந்தன் மொத்தமாக 830 கிலோகிராம் எடையைத் தூக்கி மூன்றாம் இடத்தைப்பெற்று சாதனை படைத்துள்ளார்.

ஆசிய மட்ட பளு தூக்கல் போட்டிகள் உஸ்பெகிஸ்தானில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன் போதே ச.புசாந்தன் குறித்த எடையினைத் தூக்கி மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம்-சாவகச்சேரியைச் சேர்ந்த 29 வயதான சற்குணராசா புசாந்தன் இதற்கு முன்னரும் பல சர்வதேச மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

## அமிதாப், ஷாருக்கானை பின்னுக்குத் தள்ளிய டோனி




பல வீரர்கள் ஃபார்ம் அவுட் ஆனதும் ரசிகர்களின் மனதில் இருந்தே மறைந்து விடுவார்கள். ஆனால் வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் ஐபிஎல் தொடரில் 14 முதல் 18 போட்டிகளில் மட்டுமே களத்திற்கு வரும் டோனி எப்போதும் வைரல் மனிதர்தான்.

வாகனம் ஓட்டினால், நடனம் ஆடினால், ரசிகர்கள், நண்பர்களுடன் எடுக்கும் புகைப்படங்கள் கூட செய்தி ஆகிவிடும்.

2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மட்டும் டோனி 42 பிராண்டுகளின் விளம்பர ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளதாக TAM மீடியா ரிசர்ச், இங்கிலாந்தின் காந்தார் மற்றும் அமெரிக்காவின் நீல்சன் போன்ற நிறுவனங்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நடிகர்கள் அமிதாப் பச்சன் மற்றும் ஷாருக்கானை விட அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அமிதாப் 41 ஒப்பந்தங்களையும், ஷாருக்கான் 34 ஒப்பந் தங்களையும் பெற்றுள்ளனர்.

இது குறித்து பிரபல்ய விளம்பரதாரர் கருத்துத் தெரிவிக்கையில், "டோனி கிரிக்கெட் அல்லது விளையாட்டு வீரர் என்ற ஒன்றிற்கு அப்பாற்பட்டவராகக் கருதப்படுபவர்" எனத் தெரிவித்துள்ளார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டோனியை அன்கேப்ட் வீரராக 4 கோடிக்கு அண்மையில் இடம் பெற்ற ஐ. பி. எல் ஏலத்தில் தக்கவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடைத்துணிகள் சீனத் தூதுவரால் கையளிப்பு



(கொழும்பு)

சீன அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாடசாலைச் சீருடைத் துணிகள் சீனத் தூதுவரினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய விடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை வழங்குவதில் சீனாவின் ஒத்துழைப்பு அளப்பரியது என சுட்டிக்காட்டிய பிரதமர் ஹரிணி அமரசூரிய, சீன அரசாங்கத்தின் இந்த ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான 4,640,086 பாடசாலை மாணவர்களுக்கு தேவையான 11,817 மீற்றர் (மில்லியன்) பாடசாலை சீருடைத் துணிகளை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு சீன அரசாங்கம் அண்மையில் உறுதியளித்திருந்தது.

குறித்த பாடசாலை சீருடை துணிகளை மூன்று கட்டங்களாக இலங்கைக்கு கொண்டு வருவதற்கு சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.


இதற்கமைய பாடசாலை சீருடை அடங்கிய முதல் இரு கொள்கலன்கள் கொண்ட சீனக் கப்பல் நாட்டை வந்ததடைந்ததுடன் மூன்றாவது கொள்கலன் அடங்கிய கப்பல் எதிர்வரும் 25 ஆம் திகதி நாட்டை வந்தடைய உள்ளது.

கொழும்புத் துறைமுக கொள்கலன் முனையத்தில் வைத்து சீனத் தூதுவர் கீ ஜெங் ஹொங் வினால் பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிடம் கையளிக்கப்பட்டது. சீனத் தூதுவர் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் உத்தியோகபூர்வமாக நேற்று கையளித்தார். (நி-8)

# மின்சார மாபியாக்களால் மின் துண்டிக்கப்படும் அபாயம்

(கொழும்பு)

அரசாங்கம் மாறினாலும் மின்சார சபைக்குள் மின்சார மாபியா செயற்படுவதாக இல ங்கை மின்சார சபை தொழில் நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கத்தின் உப தலைவர் நந்தன உதயகுமார தெரி வித்துள்ளார்.



நீர் மின் நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களில் வான் கதவுகள் போடப் பட்டுள்ளதுடன் நாட்டில் நிலக்கரி அதிகம் உள்ள இந்நாட்களில் இலங்கை மின்சார சபை தனியார் மின் உற்பத்தி நிலையாங் களில் இருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பான தகவல்களை முன்வைப்பதற்காக கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் வாங்கும் தந்திர நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஒரு ஜெனரேற்றர் கூட அதிகபட்ச கொள்ளளவில் இயங்கவில்லை எனவும் மின் வாரியத்தில் நீண்ட நாட்களாக இயங்கி வரும் மின் மாபியா மீண்டும் தலை தூக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்கட்டண உயர்வுக்கு இந்த மின்சார மாபியா பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் நீர் மின்சாரம் மற்றும் நிலக் கரியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திறன் உள்ள நிலையில் தனியாரிடம் மின்சாரம் வாங்குவது பெரும் விரயம் எனவும் நந்தன உதயகுமார குறிப்பிட்டார்.

அவ்வாறு மின்சார சபை அதிகாரிகள் செய்தால் அடுத்த வருடம் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வறண்ட காலநிலையில் மின்சாரத்தை கொள்வனவு செய்ய மின்சார சபையிடம் பணம் இருக்காது. அவ்வாறு ஏற்பட்டால் மீண்டும் 4 முதல் 5 மணி நேரம் மின்சாரத்தைத் துண்டிக்க நேரிட லாம் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (நி-8)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 | | 10 |
| 10 | | 12 |
| 1946 | | 2024 |



## திரு. நாகலிங்கம் கிருஷ்ணகுமார்

புற்றளை. புலோலி தெற்கு. புலோலியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை. கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கிருஷ்ணகுமார் அவர்கள் **10.12.2024** செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்றவர்களான நாகலிங்கம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும். காலம் சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும். விமலாதேவி அவர்களின் அன்புக்கணவரும். பிரகலாதன். அனுஷா. தர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். ஜெயச்சந்திரிக்கா. பிரதீஷ்வரன். லவப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும். பிரஜனி. தனுஷ். ஷாபிகா. தனுஷ்கா. கௌதம். கௌரவ். நந்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடன் மஹிந்த மலைச்சாலை. கல்கிசையில் **12.12.2024** இன்று காலை **8.30** மணியிலிருந்து மதியம் **2.00** மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் **2.00** மணி அளவில் சமயக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் **4.00** மணி அளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

தகவல்:
மனைவி: விமலாதேவி - **+94773990723**
பிள்ளைகள்: பிரகலாதன்- **+94773138766**
அனுஷா- **+94771502221** / தர்ஷன்- **+918527770155**

(C-008)


# இராசிபலன்

12.12. 2024
கார்த்திகை 27, வியாழக்கிழமை
துவாதசி முன்னிரவு 8.50 மணிவரை

அச்சுவினி முற்பகல் 8.26 மணிவரை
சுபநேரம் -7.50-9.20 மணிவரை
இராகுகாலம்1.50-3.20 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம்

வளவன்

**மேஷம்** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் தீவிரம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**துலாம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் நண்பர்கள் தொடர்பில் நன்மையுண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காண்பீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்கள் நண்பர்கள் தொடர்பில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** பயணங்களால் பலனுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, செய்தொழிலில் இருந்த தடை தாமதங்கள் எளிதாக விலகலாம்.

**விருச்சிகம்** இயல்பான வாழ்க்கையில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கடன் தொல்லைகள் தீர வழிவகை செய்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல்நலனில் கவனம் தேவை, பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**தனுசு** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

மனம் திறந்து பேச ஆனால் எல்லாவற்றையும் பேசிவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாணவி

# ஆசிய சதுரங்க இறுதி போட்டியில் பங்கேற்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் கிழக்கைச் சேர்ந்த கஜீனா தர்ஷன் என்ற மாணவி ஆசிய சதுரங்க இறுதிப் போட்டிக்கு தெரிவாகி யுள்ளார்.

ஆசிய சதுரங்க இறுதிப் போட்டியில் இலங்கை சார்பாக தாய்லாந்து செல்லவிருக்கும் செல்வி கஜீனா தர்ஷன், யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 2இல் கல்வி பயின்று வருகின்றார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இந்த சிறுமி தேசிய ரீதியில் இலங்கை பாடசா லைகள் சதுரங்க சம்மேளத் தினால் நடத்தப்பட்ட சதுரங்க போட்டியில் ஏழு வயதிற்குட் பட்ட பிரிவில் தங்கப் பதக்கத்தை பெற்று கொடுத்துள்ளார்.

இதற்கமைய இம்மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆசிய இறுதிப் போட்டியில் இலங்கை சார்பில் போட்டியிட வுள்ளார்.

மேலும் சேர்ஜியாவில் நடை பெறவுள்ள உலக பாடசா லைகள் சதுரங்க போட்டிகளி லும் மற்றும் Fide cadet போட்டிகளிலும் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ வீரராக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பால்நிலைசார் வன்முறைகள் துடைத்தெறியப்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**சிறுமிகளுக்கு எதிரான பால்நிலைசார் வன் முறைகள் அதிகரித்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கவலை வெளியிட்டார்.**



வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட் போர் கூடத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதைய காலத்தில் சிறுமிகளுக்கு எதிரான வன் முறை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர் இரண் டாவது திருமணத்தை செய்து கொள்ளும் பெண்கள் தமது முதலாவது கணவரது பிள்ளை களைத் துன்புறுத்துவதாகக் குறிப்பிட்டார். இவ்வாறான சம்பவங்கள் துடைத்தெறியப்பட வேண்டும் என வலியுறுத்தி னார்.

மேலும் எமது சமூகத்தின் பண்பாட்டு முறைமை இன்று தலைகீழாகிச் செல்வதாகவும் மிருகங்களை விட மிக மோசமாக சில மனிதர்கள் நடந்து கொள்வதாகவும் ஆளு நர் வேதனையை வெளிப்படுத் தினார்.

எனவே பெண்கள் தங்க ளுக்கு எதிரான வன்முறை எந்தத் தளத்தில் நிகழ்ந்தா லும் முறைப்பாடுகளைச் செய்ய முன் வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட ஆளுநர், அது தொடர்பான பரந்துபட்ட விழிப்புணர்வையும் ஏற்ப டுத்த வேண்டும் எனத் தெரிவித் தார். (6-8-30-33)

# பிறப்புச் சான்றிதழ் பதிவில் 76 பயனாளிகள் பயனடைவு



(யாழ்ப்பாணம்)

இதுவரை பிறப்புச் சான்றி தழைப் பதிவு செய் யாத சிறு வர்களுக்கான நடமாடும் சேவையானது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலை மையில் நேற்று முன் தினம் காலை 9 மணி தொடக்கம் பி.ப 3 மணி வரை மாவட்டச் செய லகத்தில் நடைபெற் றது.

இந் நடமாடும் சேவை யினை அரசாங்க அதிபர், பெண்கள், சிறுவர் , இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. நில் மினி ஹேரத் மற்றும் பணிப்பாளர் திருமதி இரேஷ தர்மசேனா, UNFPA நிறுவ னத்தின் ஆலோசகர் செல்வி உதேனி தேவரப்பரும போன்றோர் அவதா னித்ததுடன் பதிவு செய்யப் பட்ட பிறப்புச் சான்றிதழ் களை பயனாளிகளுக்கு வழங்கியும் வைத்தார் கள்.

குறித்த நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு பதிவு 52 சிறுவர்களுக்கும், உத்தேச வயதுப்பத்திரம் 6 பேருக் கும், பிறப்புச் சான்றிதழ் திருத்தம் 14 பேருக்கும், இறப்புப் பதிவு 4 பேருக் குமாக 76 பயனாளிகள் பயனடைந்தார்கள்.

இந் நடமாடும் சேவை யில் வட மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் கே.நட ராஜா, மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத் தர்கள், பெற்றோர்கள் மற் றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டி ருந்தார்கள். (6-33)

# வட-கிழக்கு மாகாணங்களில் நாளைவரை மழை தொடரும்

## புவியியற்துறை பேராசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதி களில் நாளை 13 ஆம் திகதி வரை மழை தொடரும் என யாழ்.பல்கலைக்கழக புவியி யற் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரி வித்தார். நேற்று வெளியிட்ட வானிலை அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தென்கிழக்கு வங்களா விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது காற்றமுத்தத் தாழ்வு நிலையாக உரு வாகிய நிலையில் இறக் கண்டிக்கு மிகச்சரியாக கிழக்கு திசையில் 96 கிலோ மீற்றரில் காணப்படுகிறது. மேற்குத் திசை நோக்கி நகர்ந்து இன்று அதிகாலை முல்லைத்தீவிற்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடைப்பட்ட பகுதியினூடாக (திருகோ ணமலையில் சில பகுதிக ளையும் உள்ளடக்கி) நிலப் பகுதிக்குள் நுழைந்து மன் னார் வளைகுடா கடற் பகுதிக்கு சென்றடையும் என்பதால் இந்த நிலைமை நாளை 13 ஆம் திகதி வரை தொடரும் என்ப தால் மீனவர்கள் கடற்பகுதிக ளுக்கு செல்வதைத் தவிர்க்க வும் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (6-8)

# போதனா மகப்பேற்று விடுதி குறைபாடுகளை நிவர்த்திக்க கோரி

## மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப் பேற்று விடுதியில் காணப் படும் குறைபாடுகள் தொடர் பாக சமூக நல அமைப்பு யாழ்ப்பாணம் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் களை கடந்த திங்கட் கிழமை சந்தித்து கலந் துரையாடியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்துள் ளனர்.

இதன் போது இது தொடர்பான உரிய நட வடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணம் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் களான வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜா மற்றும் றஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தி ஆகியோர் உறுதி அளித்துள்ளனர். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை; விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்துமாறு கோரி பெற்றோர்கள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் நேற்று புதன் கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் மூன்று வினாக்கள் கசியப்பட்ட சம்பவத்தையடுத்து பரீட்சையை மீள நடத்துமாறு கோரி பெற்றோர்கள் சிலர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் இந்த மனு எஸ். துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (நி-8)

# பயிர்களுக்கான சேதம் தொடர்பில் 1 லட்சம் விவசாயிகள் முறைப்பாடு

(கொழும்பு)

அண்மையில் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் தமது பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் 200,000 ஏக்கர் விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளதாக அதன் தலைவர் பேமசிறிஜா சிங்கராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விவசாயிகள் தங்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்ற நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

பேரழிவுகளால் விவசாயிகளின் நிலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் மொத்தம் 1 பில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது" என அவர் தெரிவித்தார். (நி-8)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : நவரத்தினம் சுதர்சன் பெண் சுறம்மியா**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சின்னத்தம்பி கனகசிங்கம்**

**ஆதன இல -76 வீதி -சுதுமலை வீதி. வட்டாரம்-04**

வட்டாரம் 04 **சுதுமலை வீதி**, ஆதன இலக்கம் 76 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் **கரகத்தனையும் கொப்பிளியன் காடும்** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 14 குளி 05.69 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் **பேராயிரம்பிள்ளை தணிகாசலம், பேராயிரம்பிள்ளை வேற்பிள்ளை** என்பவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என வெளிப்படுத்தி பேராயிரம்பிள்ளை தணிகாசலம் என்பவர் தமக்குரிய பங்கை பேராயிரம்பிள்ளை வேற்பிள்ளைக்கு பிரசித்த நொத்தாரிசு **செ.ந.விஸ்வலிங்கம்** அவர்களால் எழுதப்பட்ட 01 ஆம் இலக்க 2008.06.02 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

பேராயிரம்பிள்ளை வேற்பிள்ளையும் பெண் தவமலரும் பிரசித்த நொத்தாரிசு **செ.ந.விஸ்வலிங்கம்** அவர்களால் எழுதப்பட்ட 02 ஆம் இலக்க 2008.06.04 ஆம் திகதிய உறுதி மூலம் நவரத்தினம் சுதர்சன் பெண் சுறம்மியாவுக்கு சீதனம் வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **K.கனகசபை** அவர்களால் வரையப்பட்ட 3137/08 ஆம் இலக்க 2008.05.14 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 14 குளி 05.69 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு -**ஒழுங்கையும் மரியதாஸ் பெண் லிங்கேஸ்வரியின் ஆதனமும்**

கிழக்கு -**அம்பலவாணர் சிறிதரனுக்கும் சரவணமுத்து இலகுப்பிள்ளைக்குமுரிய ஆதனம்**

தெற்கு -**ஒழுங்கையும் அம்பலவாணர் சிறிதரனின் ஆதனமும்**

மேற்கு - **மரியதாஸ் பெண் லிங்கேஸ்வரிக்கும் இந்திரபாலன் பெண் வசந்திக்கும்**

மேற்குறித்த ஆதனத்தை நவரத்தினம் சுதர்சன் பெண் சுறம்மியா என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(2735)

**செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

# உத்தேச மின்கட்டண திருத்தம்

# ஜனவரியில் இறுதி முடிவு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் 2025 ஜனவரி 17 ஆம் திகதி எடுக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலத்திற்கு முன்வைக்கப்பட்ட மின்சார கட்டண திருத்த முன்மொழிவுக்கான பொது கலந்தாய்வு 2025 டிசெம்பர் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம் -அவிட்டம்<br>7 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: O/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14992 | பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>7 இல் செவ்.<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14988 |
| பிறப்பு:1985-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 2<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:Carpenter,France<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர்<br>தொ.இ: B/14995 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 38<br>8இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MSc(following), Banker(pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கும் ஆண்<br>தொ.இ: G/14989 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 24<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BA,DO<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்,பட்டதாரி<br>தொ.இ: B/14997 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:56<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: BSc (Agriculture), Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு,அரசதொழில்<br>தொ.இ: G/14990 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மதுப்பாவனையை கைவிட்ட தென்கொரிய மக்கள்

### பணவீக்கமே காரணம் என்கின்றனர் நிபுணர்கள்



(சியோல்)

தென் கொரியாவில் தீவிர குடிப்பழக்கம் கொண்டிருந்த பெரும்பான்மையான மக்கள் அதில் இருந்து வெளியே வந்துள்ளதை அங்கு நிலவும் சூழல் எடுத்துக்காட்டுகிறது.

முந்தைய காலங்களில் இரவு பப்கள், மதுபான விடுதிகளுக்குப் போவதும் வருவதுமாகவும் நள்ளிரவிலும் ஜன நெருக்கடி நிறைந்ததாக காணப்பட்ட இடங்களும் வீதிகளும் தற்போது வெறிச்சோடிக் கிடப்பதை பார்க்க முடிகிறது.

குறிப்பாக தலைநகர் சியோலில் முன்பைப் போலல்லாது இரவில் வெறிச்சோடி கிடக்கும் தெருக்கள் இதை உறுதிப்படுத்துகிறது.

மக்களுக்கு குடியின் ஆர்வம் குறைந்து வருவதை பல்வேறு புள்ளிவிவரங்களும் தெளிவுபடுத்துகிறது.

சியோலில் பப் நடத்தும் உரிமையாளர் ஜூன் ஜங்-சூக் கூறுகையில், சியோலில் ஒரு காலத்தில் துடிப்பான நோக்கோடு தெருவில் மக்கள் வேலையை முடித்து வந்து இரவில் நியான் விளக்குகள் எரியும் தெருக்களில் உள்ள விடுதிகள் மது வகைகள் இல்லாமல் தங்கள் நாளை முடிக்கமாட்டார்கள்.

பாப் - பப் விடுதிகள் நிரம்பி வழியும். மேசைக்கு மக்கள் வரிசையில் நிற்பதைக் காணலாம். ஆனால் இப்போது அனைத்தும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. அந்த நிலைமை முழுவதும் மாறிவிட்டது எனத் தெரிவித்தார்.

மக்கள் மதுவைக் கைவிடுவதற்கு முக்கிய காரணம் தென் கொரியாவில் ஏற்பட்டுள்ள நீண்டகால பணவீக்கம் என்று பொருளாதார நிபுணர்கள் கணிக்கின்றனர்.

கடன் நிறுவனங்கள் அருகி இருக்கும் தென் கொரியாவில் பெரும்பான்மையோர் கடனாளிகளாக மாறியிருப்பதும் வட்டி விகிதங்கள் அதிகரித்ததன் காரணமாகவும் மக்கள் தங்கள் பணப்பையைத் திறந்து செலவு செய்யத் தயக்கம் காட்டுகின்றனர். (நி-8)

## ஐ.எஸ் மீண்டும் தலை

### எச்சரிக்கும் அ

(வோஷிங்டன்)—

ஐ.எஸ் அமைப்பு சிரி தலைதூக்க முயலும் என இராஜாங்க செயலாளர் அ எச்சரித்துள்ளார்.

எனினும் இது நடைபெறுவதற்கு அனுமதிப்பதில்லை என்பது குறித்து அமெரிக்கா உறுதியாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிரிய மக்களே தங்கள் எதிர்காலத்தை தெரிவுசெய்ய வேண்டும்.

அமைதியான ஆட்சியொன்றை உருவாக்குவது குறித்த கிளர்ச்சியாளர்களின் அறிக்கைகள் வரவேற்கத்தக்கவை. ஆனால் அவர்களின் நடவடிக்கைகளே முக்கியம் வார்த்தைகள் இல்லை.

சிரியாவின் பசார் அல் அசாத்

## வேட்டை நாய்கள் பந்தயத்திற்கு நியூசிலாந்தில் தடை விதிப்பு



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் வேட்டை நாய்களைப் பயன்படுத்தி ஓட்டப்பந்தயம் நடத்துவது அந்நாட்டின் கலாசாரங்களில் ஒன்றாக உள்ளது.

இதற்காக “கிரே ஹவுண்டு” என்னும் வேட்டை நாய்கள் இனக் குட்டிகளை சிறுவயதில் இருந்து வளர்த்து அதற்காக தயார் படுத்தி வந்தனர்.

அண்மையில் இந்த வேட்டை நாய்கள் பந்தயதுக்குத் தடை விதிக்கக் கோரி விலங்குகள் நல அமைப்புகள் போராட்டம் நடத்தின.

போதைப்பொருள் கொடுத்தும் மிக கொடூரமாக துன்புறுத்தப்பட்டும் இந்த பந்தயத்துக்கு அவை தயார் படுத்தப்படுவதாக புகார்கள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து நியூசிலாந்து பாராளுமன்றத்தில் வேட்டை நாய் பந்தயத்துக்குத் தடை விதிக்கும் வகையிலான புதிய மசோதா தாக்கல் செய்யப்பட்டு பெரும்பான்மையான எம்.பி.க்கள் ஆதரவுடன் நிறைவேறியது.

இதனால்அங்கு வேட்டை நாய்கள் பந்தயத்துக்கு நிரந்தரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் இந்தப் பந்தயம் மிக பிரபலம் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சிரியாவின் இராணு இஸ்ரேல் சரமாரி



(ஜெருசலேம்)

ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் வெளியேற்றத்தைத் தொட ர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த இரு நாட்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவச் சொத்துக்களைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்தன. அவை 120 மைல்கள் வரை தாக்கும்திறன் கொண்ட ஏவுகணைகளைக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலியப் பாதுகாப்பு படையினரின் அறிக்கையில்,

லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இந்தத் தாக்குதல்கள் நடத்தியதாக கூறியது.

ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைத்தால் அவற்றை இஸ்ரேலுக்கு எதிராகப் பயன்படுத்த முடியும் என்ற காரணத்தினால், அவை கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைப்பதைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் அரங்கேற்றப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

லதாகியா துறைமுகத்தில் குண்டு வெடிப்புகளைக் காட்டும் வீடியோக்களை சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று சரி பார்த்துள்ளது. படக்காட்சிகள் கப்பல்கள் மற்றும் துறைமுகத்தின் சில பகுதிகளுக்கு விரிவான சேதத்தை ஏற்படுத்துவதை வெளிக்காட்டுகின்றன.

சிரியா மற்றும் ஆக்கிரமிக் கப்பட்ட கோலன் குன்றுகளுக்கு இடையே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ... அமைப்பு

## ...லைதூக்க வாய்ப்பு

### ...அமெரிக்கா

...ரியாவில் மீண்டும் ...ன அமெரிக்காவின் ... அன்டனி பிளிங்கன்



அரசாங்கத்தின் வீழ்ச்சி காட்டுமிராண்டித்தனத்தையும் ஊழலையும் சாத்தியமாக்கியவர்களின் வீழ்ச்சி.

ஈரான், ஹிஸ்புல்லா, ரஷ்யா ஆகிய தரப்பினரை விட வேறு எவரும் இதனைச் செய்யவில்லை.

இந்தத் தருணம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

அதேவேளை குறிப்பிடத்தக்க ஆபத்துக்களும் உள்ளன.

நம்பிக்கையை ஏற்படுத்தும் சூழ்நிலைகள் எவ்வளவு வேகமாக மாற்றமடையலாம், வன்முறை மோதலாக மாறலாம் என்பதை வரலாறு வெளிப்படுத்துகின்றது.

தன்னை மீண்டும் வலுப்படுத்திக்கொள்வதற்கு இந்த தருணத்தை ஐ.எஸ் அமைப்பு பயன்படுத்திக்கொள்ளும். தனது மறைவிடங்களை ஏற்படுத்த முயலும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# இலக்குகளை அடையும் நிலையில் ரஷ்யா - புலனாய்வுப் பிரிவு



(மொஸ்கோ)

ரஷ்யா உக்ரைன் குறித்த தனது இலக்குகளை அடையும் நிலையில் உள்ளதாக ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வெளிநாட்டு புலனாய் வின் தலைவர் சேர்கேய் நரிஸ்கின் தெரிவித்துள்ளார்.

அனைத்து பகுதிகளிலும் மூலோபாய ரீதியிலான முன் முயற்சி எங்களிற்கு சாதகமாக உள்ளது. எங்கள் இலக்குகளை அடையும் நிலையில் உள்ளோம் என தெரிவித்துள்ள அவர், உக்ரைன் படையினர் விழும் நிலையில் உள்ளனர் என தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைப் பொறுத்தவரை உக்ரைன் ஜனாதிபதி தனது நியாயபூர்வ தன்மையையும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான திறனையும் இழந்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவின் வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவின் தலைவரின் கருத்துக்கள் கிரெம்ளினின் சிந்தனைகளை வெளிப்படுத்துபவை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ...னுவத் தளங்கள் மீது ...ரியான தாக்குதல்!



உள்ள இராணுவ மற்ற பாதுகாப்பு மண்டலத்திற்கு தரைப் படைகளை நகர்த்தும் போது சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் 350 இற்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேலியப் பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது.

முன்னதாக சிரிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் கடந்த ஞாயிற்றுக் கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலியப் பாதுகாப்பு படை 310 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு தெரிவித்தது.

இதனிடையே இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஒரு அறிக்கையில், "இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோபாய திறன்களை அழிப்பதே" இஸ்ரேலிய படையினரின் நோக்கம். சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை "பெரும் வெற்றி" பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால் மைராவில் உள்ள விமான நிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்கள் ஆயுதக் கிடங்குகள், வெடிமருந்துக் கிடங்குகள் மற்றும் கடல் ஏவுகணைகளையும் குறிவைத்து அரங்கேற்றப்பட்டுள்ளன. (நி-8)

# ஜனாதிபதி புடினை சந்தித்த ராஜ்நாத் சிங்

(மொஸ்கோ)

ரஷ்யா சென்றுள்ள, இந்தியப் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அந்நாட்டு ஜனாதிபதி புடினைச் சந்தித்து பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர், இந்தியா-ரஷ்யா நட்புறவு, உலகின் மிக உயர்ந்த மலையை விட உயரமானது.

உலகின் மிக ஆழமான கடலைக் காட்டிலும் ஆழமானது எனத் தெரிவித்தார்.

அரசு முறைப் பயணமாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ரஷ்யா சென்றுள்ளார்.



அவர் இந்தியா-ரஷ்யா இராணுவ ஒத்துழைப்புக்கான குழுவின் மாநாட்டில் பங்கேற்றார்.

மொஸ்கோவில் அந்நாட்டு ஜனாதிபதி புடினைச் சந்தித்துப் பேசினார். இருநாட்டு தலைவர்களும்உறவைமேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்தனர்.

"ரஷ்யா-இந்தியாவுக்கு இடையிலான உறவு மகத்தான ஆற்றலை கொண்டுள்ளது" என இரு நாட்டுத் தலைவர்களும் தெரிவித்தனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைகள் மூடப்படும் நிலையில்

(கொழும்பு)

பல மதுபான ஆலைகள் மற்றும் மதுபானக் கடைகள் வரி செலுத்தாததால் 2025ஆம் ஆண்டுக்கான மதுவரி உரிமம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் சுமார் 4,500 மதுபான நிறுவனங்கள் மற்றும் மதுபானசாலைகள் உள்ளதாகவும் தற்போது 2025 ஆம் ஆண்டுக்கான உரிமங்களை சுமார் 200 பேருக்கு பெற்றுக்கொள்வதற்கான வரி அனுமதி அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து மதுவரி திணைக்களம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையில் நிர்ணயிக்கப்பட்ட முறையில் வரி செலுத்தியவர்களின் அனுமதி அறிக்கைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மதுவரித் திணைக்களத்திற்கு வழங்கும் என மதுபான அனுமதிப்பத்திரம் பெறுவோர் சங்கத்தின் தவிசாளர் அஜித் உடுகம தெரிவித்துள்ளார். அத்தோடு இதுவரை செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தாதவர்களும் உரிய வரியைச் செலுத்தி அதற்கான தகுதிகளைப் பெற்று அனுமதி அறிக்கைகளை அனுப்புமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்த வருடங்களில் பல்வேறு முறைகளின் மூலம் கலால் திணைக்களத்திற்கு அனுமதி அறிக்கைகளை அனுப்பிய போதிலும், இம்முறை அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதது மதுவரித் திணைக்களத்திற்கு அனுமதி அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# கொழும்பு துறைமுக திட்டத்திற்கு அமெரிக்க நிதி தேவையில்லை

## அதானி குழுமம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திட்டத்திற்கு அமெரிக்காவின் நிதியுதவியைப் பயன்படுத்தப்போவதில்லை என அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

அதானி குழுமம் கொழும்புத் துறைமுகத் திட்டத்திற்கு தனது நிதியை பயன்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

கொழும்புத்துறைமுகத் திட்டத்திற்கான பணிகள் தொடர்கின்றன அடுத்த வருட ஆரம்பத்தில் அவற்றை ஆரம்பிக்கலாம் என தெரிவித்துள்ள அதானி குழுமமும் எஸ்ஈஜட் நிறுவனமும் தங்கள் மேலாண்மை மூலோபாயத்தின் அடிப்படையில் உள்திரட்டல் மூலம் தற்போதைய திட்டத்திற்கு நிதி வழங்கப் போவதாக தெரிவித்துள்ளன. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 500 | 450 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 250 | 250 |
| பச்சைமிளகாய் | 1000 | 800 | 1000 | 800 |
| தக்காளி | 350 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 180 | 240 | 200 |
| கோவா | 250 | 200 | 250 | 400 |
| கரட் | 150 | 260 | 250 | 300 |
| பூசணி | 120 | 150 | 200 | 200 |
| புடோல் | 160 | 300 | 300 | 400 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 1400 | 2000 | 1000 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 650 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 250 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 1000 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 850 | 800 | 1000 | 1000 |
| போஞ்சி | 600 | 550 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 350 | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 160 | 150 | 250 |
| தேசிக்காய் | 600 | 450 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 160-200 |
| இராசவள்ளி | --- | 900 | 650 | 1000 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- |
| முள்ளங்கி | 120 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 40 | 100 | 100 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 282



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## இளம் பருவம்


என்ன சார் உங்கள் பையன் என்ன செய்து கொண்டு இருக்கின்றான் இப்போது என்று கேட்டார் ஒருவர். அடிக்கடி கண்ணாடி முன்னாலே நின்று அழகு பார்த்துக் கொண்டு இருக்கிறான் என்றார் அப்பா. இதையெல்லாம் சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள் என்றார் அவர். என்ன சார் சொல்கின்றீர்கள் கண்ணாடி முன்னாலே நின்று கொண்டு நேரத்தை வீணடித்துக் கொண்டு இருக்கிறான். அதை ஒரு பெரிய விடயமாக நான் நினைக்க வேண்டுமா என்றார் இவர். இளம் பருவத்திலே இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் அடிக்கடி கண்ணாடி பார்க்கவேண்டும் என்று தோன்றும். அது வெறுமனே அழகு பார்க்கிறது மட்டுமில்லை அவர்கள் தங்களையே தேடிக் கண்டுபிடிக்கின்ற ஒரு முயற்சி. அது ஒரு மனோதத்துவ விளைவு. இதுவரைக்கும் சிறு பிள்ளையாக இருந்து விட்டோம் இனிமேல் நாங்களும் மற்றவர்கள் மாதிரி மனிதர்கள் தான் என்கின்ற உணர்வு அவர்களுக்கு வருகின்றது. தங்களுடைய முகம் எப்படி இருக்கிறது, அழகு எப்படி இருக்கிறது, உடம்பு நிறம் எப்படி இருக்கிறது, முடி எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். அதற்கு பின் இன்னொரு ஆணோ? பெண்ணோ தன்னை கவனிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதெல்லாம் இயற்கை. இதைப் பார்த்துவிட்டு பெற்றோர்கள் பிள்ளைகள் கெட்டுப் போய் விட்டார்கள் என்று நினைக்கக்கூடாது அவர்களைப் பேசிக் கொண்டு இருக்கக்கூடாது இன்றைக்கு பல குடும்பங்களில் இது தான் நடந்து கொண்டிருக்கின்றது.

மனித வாழ்க்கையிலேயே இப்படியும் இல்லாத அப்படியும் இல்லாத ஒரு பருவம் இளம் பருவம். 13 வயதிலேயிருந்து 19 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் இந்த வயதைச் சேர்ந்தவர்கள் (Teen Agr Group). இவர்களை சிறியவர்கள் என்றும் நினைத்துவிட முடியாது. பெரியவர்கள் என்றும் நினைத்து விட முடியாது. இவர்கள் மிகவும் மென்மையானவர்கள். சமூகம் நினைத்தால் இவர்களையும் நல்லவர்களாகவும் மாற்றலாம், கெட்டவர்களாகவும் மாற்றலாம். சிறிது அக்கறை எடுத்துக்கொண்டால் பெரிய பெரிய மேதைகளையும் விஞ்ஞானிகளையும் உருவாக்கலாம். ஆனால் நடக்கிறது என்ன தெரியுமா? அநேகமாக இவர்களை யாருமே சரியாகப் புரிந்து கொள்வது இல்லை இவர்களை சரியாக நடத்துவதும் இல்லை.இதுவரைக்கும் நாம் சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்தான் இப்போதெல்லாம் அவன் இஷ்டத்திற்கு நடக்க ஆரம்பித்து விட்டான் என்று வருத்தப்படுகின்ற பெற்றோர்கள் அதிகம். இது வருத்தப்படுகின்ற விடயமல்ல சார். சந்தோசப்பட வேண்டிய விடயம். உங்கள் பிள்ளை சொந்தமாக யோசிக்க ஆரம்பிக்கின்றதும் நடந்து கொள்ள ஆரம்பிக்கின்றதும் ஒரு தவறான விடயமா? அவன் கடைசி வரைக்கும் உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும் என்பது என்ன நியாயம்? இன்றைக்கு இளைஞர்களை பெரியவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு நடப்பதனாலேயே தான் அவர்களுக்கு வெறுப்பு, எரிச்சல், மனக் கசப்பு எல்லாம் உண்டாகின்றது. பெற்றோர்கள் சரியாக மதிக்கவில்லை என்கின்ற ஒரே காரணத்தினாலேயே வீணாகப்போகின்ற பிள்ளைகள் இன்றைக்கு அதிகம். சரி பெற்றோர்களுக்கு இன்றைக்கு என்ன தான் புத்தி சொல்ல வருகின்றீர்கள் என்று கேட்கின்றீர்களா? நான் எதையும் சொல்ல வரவிரல்லை. அது சம்பந்தமான சில நிபுணர்கள் சொல்லியிருப்பதை உங்கள் காதிலேயும் போட்டு வைக்கின்றேன் அவ்வளவும் தான்.

பிள்ளைகளிடம் அன்பு செலுத்துங்கள். குழந்தையாக இருக்கும் போது எவ்வளவு பாசம் வைத்தீர்கள். வளர வளர அதை ஏன் குறைக்கின்றீர்கள்? பெற்றோர்களின் அன்பான வார்த்தைகளுக்கு ஏங்குபவர்கள் தான் இன்றைய இளைஞர்கள். அவர்கள் எதைச் சொன்னாலும் அதை அக்கறையாக காது கொடுத்துக் கேளுங்கள். அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்கள் விரும்புவது உங்களிடமிருந்து ஒரு மதிப்பு,மரியாதை, அங்கீகாரம் இவ்வளவு தான். அவர்கள் அவர்களாகவே முடிவு எடுக்கட்டும். அதற்கு நீங்கள் உதவியாக இருங்கள் அது போதும். மற்றவர்கள் முன்னாலே முக்கியமாக அவர்கள் நண்பர்கள் முன்னாலே அவர்களைப் பற்றி குறையாகப் பேசாதீர்கள். அவர்களிடம் பொய் சொல்லாதீர்கள். நீங்கள் சொன்னது பொய் என்று தெரிந்து விட்டால் உங்கள் மீது அவர்களுக்கு இருக்கின்ற மதிப்புப் போய்விடும். நம்பிக்கை போய்விடும்.

அவர்கள் முன்னாலே நீங்கள் சண்டை போடாதீர்கள். உங்கள் பிள்ளையை எப்போதும் இன்னொரு பிள்ளையோடு ஒப்பிட்டுப் பேசுகின்ற வேலையே வேண்டாம். கூடப்பிறந்தவர்களோடு கூட ஒப்பிடக் கூடாது. இப்படி செய்தால் அவர்கள் உங்களிடம் பிரியமாக இருக்கமாட்டார்கள். அவர்களிடமும் பிரியமாக இருக்க மாட்டார்கள். பிள்ளைகள் எங்கே போகின்றார்கள். என்ன செய்கின்றார்கள் என்று அவர்கள் பின்னாலே போய் துப்பறிந்து கொண்டிருக்காதீர்கள். இளைஞர்கள் தனிமையை விரும்புகின்றார்கள். அவர்களை பெட்டியிலே மூடிப்பாதுகாக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். அவர்களை எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கே தெரியும். உங்கள் பிள்ளை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களோ அது மாதிரி நீங்கள் நடந்து காட்டுங்கள் அது போதும். ஒரு வீட்டிலே அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். என்னங்க எங்களுடைய மகள் பெரியவளாகிவிட்டாள். அடிக்கடி கண்ணாடி முன்னாலே போய் நின்று கொண்டிருக்கின்றாள். விரைவாக ஒரு பையனைப் பார்த்து திருமணத்தை முடிக்காமல் இப்படி மசமசவென்று கல்லு மாதிரி உட்கார்ந்திருக்கின்றீர்களே! என்று சத்தம் போட்டார் அந்த அம்மா. அவசரப்படாதே! பார்ப்பதற்கு கண்ணிற்கு அழகாக புத்திசாலியாக ஒரு பையன் கிடைக்க வேண்டாமா? அது தான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்றார் அப்பா. இதற்கு அந்த அம்மா என்னுடைய அப்பா இப்படி நினைத்துக் கொண்டிருந்திருந்தால் எனக்கு திருமணமே நடந்திருக்காது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காய்ச்சல் நீடித்தால் காலம்

## தாழ்த்தாது வைத்தியசாலையை நாடவும்

## வைத்தியர் பேரானந்தராஜா அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**48 மணித்தியாலத்துக்கு கூடுதலாக காய்ச்சல் நீடிக்குமாக இருந்தால் தாமதிக்காது அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனாவின் பொது வைத்திய நிபுணர் வைத்தியர் டி.பேரானந்தராஜா தெரிவித்துள்ளார்.**


யாழ்.போதனாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மழை காரணமாக பல இடங்களில் நீர்ப்பெருக்கங்கள் ஏற்பட்டு வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து இருக்கிறது. இந் நிலையில் குறித்த நீரில் மலக் கழிவுகள், எலிகளின் கழிவுகள் என்பன கலப்பதால் நீர் அசுத்தமடைகிறது. குறித்த நீரில் உள்ள கிருமிகள் உடல் நோய்வாய்ப்பட்ட ஒருவரது காலிலோ, கையிலோ இருக்கும் காயங்களினூடாக கிருமிகள் உட் செல்லும் நிலை ஏற்படும். இதனால் காய்ச்சல், உடம்பிலே இயலாமைத் தன்மை, சோர்வு, தலையிடி போன்ற குணம் குறிகள் ஏற் படுகின்றது.

இந்த இருவகை காய்ச்சலினால் சுவாசம் சம்பந்தமான நோய் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே உங்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் காலம் தாழ்த்தாது அருகில் உள்ள வைத்திய சாலைக்கு சென்று இரத்தப் பரிசோதனை மற்றும் வைத்தியர்களது ஆலோசனை களை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். (6-8)

# உறவுகளது போராட்டத்தை புகைப்படம் எடுத்த புலனாய்வாளர்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முன்தினம் மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றவர்களை சிவில் உடை தரித்த புலனாய்வாளர் ஒருவர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டிருந்தார்.

அந்நபர் போராட்டக்காரர்களினை அருகே சென்று ஒவ்வொருவராகப் புகைப்படம் எடுத்த போது இவ்விடத்தில் ஒவ்வொரு உறவுகளையும் புகைப்படம் எடுக்க வேண்டிய தேவை என்ன என கேட்டதுடன் புகைப்படம் எடுக் காது இவ்விடத்தை விட்டுச் செல்லுமாறும் போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் தெரிவித்தனர்.

இவ்வாறாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டங்களை இராணுவத்தினர், பொலிஸார், சிவில் உடை தரித்த புலனாய்வாளர்கள் போன்றோர் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# மன்னாரில் இடம்பெற்ற விழிப்புணர்வு ஊர்வலம்



(மன்னார்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நேற்று முன்தினம் மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாட்டில் இளையோர்களை ஒன்றிணைத்து விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

இளையோர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் குரல் கொடுக்கும் முகமாக குறித்த ஊர்வலம் இடம்பெற்றது.

மன்னார் பஜார் பகுதியில் இருந்து குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாகச் சென்று மீண்டும் மன்னார் பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)

# மதுபான கடைகளுக்கெதிராக கண்டனப் போராட்டம்

(கிளிநொச்சி)

அதிகரித்த மதுபான கடைகளுக்கெதிரான கண்டனப் போராட்டத்திற்கு மது போதைக்கு எதிரான இயக்கம் மற்றும் வடக்கு-கிழக்கு மறுவாழ்வு அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

குறித்த கண்டனப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

எனவே சமூகமட்ட பொது அமைப்புக்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# விசுவமடுவில் இறந்த நிலையில் புலி ஒன்றின் சடலம் மீட்பு

(தருமபுரம்)

விசுவமடுப் பகுதியில் இறந்த நிலையில் புலி ஒன்றின் உடல் நேற்று முன்தினம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுத் தொட்டியடிப் பகுதியில் உள்ள கோவில் வளாகத்தில் அமைந்துள்ள மடப்பள்ளி பகுதியில் இறந்த நிலையில் புலி ஒன்று இருந்ததை அவதானித்த பூசகர் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் அறிவித்தார்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த திணைக்கள அதிகாரிகள் இறந்த புலியின் உடலை மீட்டு எடுத்துச் சென்றுள்ளனர். (6-8-316)

# யாழில் இடம்பெற்ற விவசாய குழுக்கூட்டம்

## விவசாய கடன், பீடைக்கட்டுப்பாடு தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாய குழுக் கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேலும் வெள்ள நீர் வீதிகளில் தேங்கியமைக்கு வீதிகளின் அமைப்பு முறைகள், மதகுகள் போன்றவை அமைத்ததில் சரியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை எனப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதால் இதற்கான பொறிமுறை உருவாக்குவதற்கு பிரதேச செயலக ரீதியாக கலந்துரையாடல் ஒன்றினை ஏற்பாடு செய்யுமாறு தெரிவித்தார்.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் ஊடாக வெள்ள அழிவு பயிர்களின் தரவுகளை துல்லியமாக பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையை உருவாக்குமாறு பிரதேச செயலாளர்களை அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

விவசாய கடன்கள் பற்றிய தெளிவூட்டல்கள், காப்புறுதி, 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாண, மாவட்ட விவசாய திட்டங்கள், வெண்முகுது தாவரதத்தி, கபிலத்தத்தி ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடு மற்றும் முற்காப்பு நடவடிக்கை என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 654





அப்படியா? அவற்றில் இரண்டொரு நல்ல பாடல்கள் சொல்லுங்கள்!

"எல்லாம் நல்ல பாடல்கள்தான். இதைக்கேள்,

'வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய் வது ஒற்று.'

அரசன் தன்கீழ் ஊழியம் செய்வோரையும், தன்னுடைய சொந்த உறவினரையும் அவ்வாறே தன் பகைவர்களையும் ஒற்றர்கள் வைத்து ஆராய்ந்து கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர். இன்னும் கேள்.

'துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்து
என்செயினும் சோர்வில தொற்று.'

துறவிகளைப் போல் வேடம் பூண்டும் செத்தவர்களைப் போல் பாசாங்கு செய்தும் எதிரிகள் எவ்வளவு துன்புறுத்தினாலும் இரகசியத்தை வெளியிடாமலும்சோர்வில்லாமல் உழைப்பவன் ஒற்றன் என்று வள்ளுவர் கூறுகிறார். அரசர்கள் ஒரு ஒற்றனுடைய காரியத்தை இன்னொரு ஒற்றனைக் கொண்டு ஒற்றறிய வேண்டும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

'ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்'.

இந்தப் பாடல்களையெல்லாம் நீ கேட்டதில்லையென்றா சொல்கிறாய்?"

வந்தியத்தேவனுக்கும் ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. இனி அவகாசம் கிடைத்ததும் திருக்குறளைப் படித்துவிட்டுத் தான் வேறு காரியம் பார்ப்பது என்று தீர்மானித்துக் கொண்டான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படியெல்லாம் இராஜரீக முறைகளைப் பற்றி எழுதியவர் எத்தகைய அறிவாளியாயிருக்க வேண்டும்?

இன்னும் சற்றுப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்தியத்தேவன் புறப்பட்டான். "இன்றிரவு இங்கே தாமதித்து விட்டுக் காலையில் போகலாமே!" என்று சோதிடர் கூறியதை அவன் கேட்கவில்லை.

"இன்னொரு சமயம் வருகிறேன் அப்போது தங்கள் விருந்தாளியாயிருக்கிறேன்" என்றான்.

"இன்னொரு சமயம் நீ இங்கு வரும்போது என்னுடைய சோதிடங்கள் பலித்திருப்பதைக் காண்பாய்!" என்றார் சோதிடர்.

"ஐயா, சோதிடரே! நீர் சோதிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? சொல்லியிருந்தால் அல்லவா அவை பலிக்க முடியும்?" என்று கூறி நகைத்துக்கொண்டே வந்தியத்தேவன் குதிரைமீது ஏறிப் புறப்பட்டான்.

சோதிடர் வீட்டிலிருந்து சற்றுத்தூரம் வரையில் ஒரே பாதைதான் இருந்தது. பல்லக்குச் சென்ற பாதையிலேயே அவனும் போக வேண்டியிருந்தது. பின்னர் பாதைகள் இரண்டாகப் பிரிந்தன. ஒரு பாதை வடக்கு நோக்கிக் கொள்ளிடக் கரைக்குச் சென்றது. இன்னொன்று, தென்கிழக்காகத் திருவாரூர் நோக்கிச் சென்றது. திருவாரூர்ச் சாலையில் வெகு தூரத்தில் பல்லக்குப் போய்க்கொண்டிருப்பதை வந்தியத்தேவன் பார்த்தான். ஒரு கணம் அவனுடைய உள்ளம் தத்தளித்தது.

கொடும்பாளூர் இளவரசி கேட்ட உதவியை மறுக்க வேண்டி வந்து .விட்டதே! உண்மையிலேயே அவளுக்கு உதவி தேவையிருக்குமானால் வழியில் அபாயம் ஏதேனும் ஏற்படுமானால் பின்னால் அந்தச் செய்தி தெரியும்போது என்னை நானே மன்னித்துக் கொள்ள முடியுமா?

(தொடரும்)

---



## சிறுவர் அரங்கம்

## பிணியும் மருந்தும்



ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு ஒரு நாள் வயிற்றுவலி வந்தது. சிறிது நேரம் வலித்துக் கொண்டு இருந்து பின் விட்டுவிட்டது. ஏதோ உணவுக்கோளாறு என்று பேசாமல் இருந்து விட்டான். பிறகு சில நாட்கள் கழித்து மீண்டும் வயிற்றுவலி ஏற்பட்டது. வலிக்கிற வரை வயிற்றை அமுக்கிப் பிடித்துக்கொண்டு இருந்து வலி விட்ட பின் அதைப்பற்றி மறந்தே போய்விட்டான்.

நாளாக ஆக அடிக்கடி வயிற்றை வலித்தது. வலி வந்தபோதெல்லாம் துன்பப்பட்டு விட்ட பிறகு அதைப் பற்றிச் சிந்திக்காமலே இருந்துவிட்டான் அவன். அதனால் வயிற்றுவலி முற்றியது.

ஒரு நாள் மிக அதிகமாக வயிறு வலித்தது. அந்த வலி பொறுக்க முடியாமல் தான் இறந்து போக நேரிடுமோ என்று கூட அம்மனிதன் அஞ்சினான்.

"என் கூடவே பிறந்து இந்த வியாதி என்னைக் கொல்கிறதே!" என்று அவன் துயரத்தோடு கூறினான்.

அன்று நாள் முழுவதும் வயிறு வலித்துக் கொண்டே இருந்தபடியால், அவன் எவ்வாறேனும் வயிறு வலித்தது. நிறுத்திவிட வேண்டும் என்று ஒரு மருத்துவன் வீட்டுக்குச் சென்றான்.

மருத்துவன் அவன் உடலைப் பார்த்தான். வயிற்றை அமுக்கிப்பார்த்தான். பின் பல கேள்விகள் கேட்டான். கடைசியில் அவன், "இவ்வயிற்று வலியைத் தீர்க்கக்கூடிய மருந்து ஒன்றே ஒன்றுதான். பறம்பு மலையில் உள்ள ஒரு மூலிகையைக் கொண்டு வந்து அரைத்துக் கொடுத்தால் வயிற்று வலி நின்றுவிடும்" என்றான்.

"ஐயா, என்ன செலவு வந்தாலும் சரி, அம்மூலி கையைக் கொண்டு வந்து என் வயிறு வலியை நிறுத்துங்கள்" என்று கெஞ்சினான் அம்மனிதன். மருத்துவன் அன்றே பறம்பு மலைக்குப் புறப்பட்டுச் சென்று அம்மருந்து மூலிகையைத் தேடிக்கண்டு பிடித்துக்கொண்டு வந்தான். அதை அரைத்துக் கொடுத்தவுடன், அம்மனிதனின் வயிற்றுவலி நின்று விட்டது.

என் உடலோடு பிறந்த இவ்வியாதி என் உயிரைக் கொல்ல இருந்தது. ஆனால் எங்கோ மலையில் பிறந்த இம் மூலிகை என்னைக் காப்பாற்றி விட்டது என்று அம்மனிதன் மகிழ்ச்சியோடு கூறினான்

கருத்துரை :- கூடப் பிறந்தவர்களும் சில சமயம் கொல்லத் துணிவார்கள். முன்பின் தெரியாதவர்களும் சில சமயம் துன்பத்தைத் துடைக்க முன் வருவார்கள். அவர்கள் நட்பை உதறி விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காய்ச்சல் தொடர்பில் விழிப்பாக இருங்கள்

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாணத்தில் இனம் புரியாத காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் 6 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தவிர, காய்ச்சலுக்கு ஆளாகியவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இனம்புரியாத இக்காய்ச்சல் எலிக்காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேலதிக பரிசோதனைக்காக இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மருத்துவ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வட மாகாணத்தில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளம் காரணமாக எலிகளின் சலத்திலுள்ள பக்றீரியாக்கள் மற்றும் விலங்குகளில் இருக்கக்கூடிய உண்ணிகளால் இந்தத் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டென வைத்திய நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆக, காய்ச்சல் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுவது மிகவும் அவசியமானது. இது விடயத்தில் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

பொதுவில் மழை காலத்தில் சளி, காய்ச்சல் ஏற்படுவது வழக்கம் என்ற நினைப்பில் எவரும் அசமந்தமாக இருந்துவிடக்கூடாது.

அதேநேரம் கடும் மழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளம் எங்கள் வாழ்விடங்களில் தேங்கியதன் காரணமாக, நாங்கள் நடமாடுகின்ற இடங்கள் அசுத்தமாகியுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

அதேவேளை எங்கள் பிரதேசத்தில் எலிகளின் தொல்லை தாராளமாக உள்ளது. இது தவிர தெரு நாய்கள், பூனைகள் மற்றும் பிராணிகளில் இருக்கக்கூடிய நோய்த் தொற்றுகளும் உண்ணி, தெள்ளு போன்றவையும் நாம் நடமாடுகின்ற இடங்களில் பரவி இருக்கக்கூடிய ஏதுநிலை உண்டு.

உண்மையில் மழை வெள்ளம் தேங்கிய குடியிருப்பிடங்களில் தொற்று நீக்குதலின் பொருட்டு கிருமிநாசினிகளை விசிறியிருக்க வேண்டும்.

எனினும் அதுவிடயத்தில் நாமும் பாராமுகமாக இருந்துவிட, இப்போது எலிக்காய்ச்சல் அல்லது உண்ணிக்காய்ச்சல் தாக்கத்தை நாம் அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆக, தற்போது வட மாகாணத்தில் பரவி வரும் காய்ச்சல் தொடர்பில் நாம் காலதாமதம் செய்யாமல் உடனடியாக அரச வைத்தியசாலைகளை நாடுவது அவசியம்.

அதேநேரம் எலிகளை, தெரு நாய்களை இல்லாது செய்வதற்கான முயற்சிகளை தனிநபர் முதற்கொண்டு அரச அமைப்புகள் ஈறாகச் செய்வது மிக மிக அவசியம்.

ஆபத்துக்கள் வருகின்றபோது நாம் உசாராவதைவிட, அந்த ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மூலங்களை முன் கூட்டியே கட்டுப்படுத்துவது வருமுன்னர் காக்கின்ற பணியாக இருக்கும் என்பதும் இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில்

# உள்ளூராட்சி மன்றங்கள் மாற்றமடைய வேண்டும் - வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடையச் செய்யும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற பண்பாட்டு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும்.

நான் யாழ். மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்குச் சிலர் வந்தார்கள். ஆனால் அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களிடம் கேட்டபோது, முதலீடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் கையூட்டு எதிர்பார்க்கின்றார்கள் என்று சொன்னார்கள்.

அது அன்றைய நிலைமை. ஆனால் தற்போதைய அரசாங்கம் அவற்றுக்கு முற்றிலும் எதிரானது. பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்க வேண்டும். எமது உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயற்பட வேண்டும்.

அவர்களை அலைக்கழிக்கக்கூடாது. எமது மாகாணத்தை நாம் அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

### யாழ்.மாவட்ட செயலகத்தின்

# சிறுவர் அபிவிருத்திக் குழுவின் காலாண்டுக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் 4 ஆவது காலாண்டுக்குரிய குழுக் கூட்டமானது யாழ்ப்பாண மாவட்டப் பிரதி அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று பி.ப 2.00 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதி அரசாங்க அதிபர் அவர்களால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அறிவுறுத்தல்கள் உரிய தரப்புகளுக்கு வழங்கப்பட்டன.

1.பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி மாலை வேளையில் பயணிக்கும் யாழ்ப்பாணம் - உசன் வரையான இலங்கைப் போக்குவரத்து சேவையினை கெற்பேலி வரையில் நீடிப்பு செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டதற்கமைய, அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு இலங்கைப் போக்குவரத்து சபையினருக்கு பிரதி அரசாங்க அதிபர் அறிவுறுத்தினார்.

2.மாணவர்களின் பாடசாலை இடை விலகல் மற்றும் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்த அரசாங்க அதிபர் அவர்கள், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

3.முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தனியார் கல்வி நிறுவனங்கள் தரம் 09 கீழ்ப்பட்ட வகுப்புகளை வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாகவும் மாணவர்களின் இணை பாடவிதானச் செயற்பாடுகளுக்காக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்த தனியார் கல்வி நிறுவனங்கள் ஒத்துழைப்பு நல்குமாறு பிரதி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டதுடன், இது தொடர்பில் பிரதேச செயலாளர்களை உரிய கல்வி நிறுவனங்களுக்கு தெளிவுபடுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும் போதைப் பொருள் பாவனை தொடர்பாகவும் மற்றும் மாவட்ட ரீதியாக கிடைக்கப் பெற்ற 21 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில், உதவி மாவட்ட செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் , சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-7,33)

# சபாநாயகர் அசோக எங்கள் பல்கலையில் படிக்கவில்லை

### ஜப்பான் பல்கலைக்கழகம் எழுத்துமூலம் அறிவிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல முனைவர் பட்டம் பெற ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக் கழகத்தில் படிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

சபாநாயகர் ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் படித்தவரா? என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அந்தப் பல்கலைக்கழகத்திடம் தகவல்களைக் கோரியுள்ளதுடன், அவ்வாறான வொருவர் அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கவில்லை எனப் பல்கலைக்கழகம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

கொழும்பு - 07 இல் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பத்தாவது பாராளுமன்றத்தின் 22 வது சபாநாயகர் நாட்டின் உயரிய பதவியான சபாநாயகர் பதவியை கீழறுத்துள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார். அவர் உடனடியாக சபாநாயகர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தலின் போது கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு தலைமை தாங்கிய அமைச்சர் விஜித ஹேரத் வழங்கிய கையேட்டில், கம்பஹா வேட்பாளர் அசோக சபுமல் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்த பின்னர் சின்ஜுகு வசேடா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இதனைப்பல்கலைக்கழகம் மறுத்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

### நீண்ட தூர சேவையில் ஈடுபடும்

# ரயில் பயணச் சீட்டு முன்பதிவில் மோசடி

நீண்ட தூர சேவையில் ஈடுபடும் ரயில்களில் முன்பதிவு செய்து பயணச் சீட்டை கொள்வனவு செய்வதில் மோசடி இடம் பெற்றுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சில குழுக்கள் ரயில் ஆசன முன்பதிவு பயணச் சீட்டுகளை இணையத்தளத்தில் கொள்வனவு செய்து பின்னர் அதிக விலைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றமை குறித்துப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பிரதி அமைச்சர், டொக்டர் பிரசன்ன குணசேன குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக பயணிகளுக்குப்பாரிய அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்களின் தொலைபேசி இலக்கங்களும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இந்த மோசடியுடன் தொடர்புடைய சகலரையும் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்பதிவு செய்யப்பட்ட ஆசனப் பயணச் சீட்டுகள் தொடர்பான சோதனைகளை கடுமையாக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளதாகப் பிரதி அமைச்சர், டொக்டர் பிரசன்ன குணசேன கூறியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

## பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் அமைச்சர் ஹர்சன

**(கொழும்பு)**

**பயங்கரவாதத் தடைச்சட்டம், நிகழ்நிலைக்காப்புச் சட்டம் என்பன தொடர்பில் அவசியமான அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார். தாம் பெரும்பான்மை ஆணையைப் பெற்றிருப்பதைக் காரணம் காட்டி தன்னிச்சையாக செயற்படமாட்டோம் எனவும் சகல தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற்று முன்னகர்வோம் எனவும் குறிப்பிட்டார்.**



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "சர்வஜன நீதி" அமைப்பினால் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது, பாலஸ்தீனத்துக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகால நல்லுறவு காணப்படுகிறது. ஆகவே பாலஸ்தீன விவகாரத்தில் உணர்வுபூர்வமாகவே செயற்படுவோம். நாடு என்ற ரீதியில் பாலஸ்தீன மக்களுக்கு குரல் கொடுப்போம்.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியன இயங்கு நிலையில் உள்ளன. இருப்பினும் இங்கே கூறப்பட்டதை போன்று பல்வேறு பிரச்சினைகள் நிலவுவதை ஏற்றுக் கொள்கிறேன்.

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஒரு இனவாத அலையுடனேயே ஆட்சிக்கு வந்தார். அப்போது இக கட்டமைப்புக்கள் உரிய முறையில் அவற்றின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்ற தேவைப்பாடு அவ் அரசுக்கு இருந்ததா? என்பது தெரியவில்லை.

இப்போது இக்கட்டமைப்புக்கள் மீதான நம்பகத்தன்மையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது. நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம் அக்கட்டமைப்புக்களின் வெளிப்படைத் தன்மை, செயற்திறன் என்பவற்றையும் உறுதிப்படுத்த முடியும்.

அடுத்ததாக சட்ட உருவாக்கம் மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் ஆகிய இரு முக்கிய விடயங்கள் உள்ளன. அதேபோன்று சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் அதேநேரம் மக்களின் மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பன தொடர்பில் அவசியமான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நான் வலுவாக நம்புகிறேன்.

அதேவேளை இச்சட்ட உருவாக்கங்களின் போது எமது அரசாங்கம் தொடக்கத்தில் இருந்து செயற்பட வேண்டிய அவசியம் இருக்காது. ஏனெனில் ஏற்கெனவே பல்வேறு சட்ட மூலங்கள் பாராளுமன்றத் தில் நிலுவையில் உள்ளன. அவற்றை முன்னகர்த்த வேண்டும்.

மேலும், எமது அரசாங்கம் பெரும்பான்மை மக்களாணையை பெற்றுள்ளது.அதன் அர்த்தம் நாம் எதேர்ச்சதிகாரமாக, தன்னிச்சையாக செயற்பட முடியும் என்பதல்ல, மாறாக எமது அரசாங்கம் முன்னெடுக்கும் முக்கிய நகர்வுகளில் நாம் சகல சம்பந்தப்பட்ட தரப்பினரதும், கருத்துக்களை கேட்டறிந்தே செயற்படுவோம் என அவர் தெரிவித்தார். (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3274

### ரகுராம்




### சஞ்சனா




### பூஜா





### சரோன்




### மதுசன்




### விதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

வவுனியா, வேலங்குளம் பகுதியில் வசித்த முன்னாள் கிராம சேவகரான குறித்த நபர் நேற்று முன்தினம் மாலை தனது மாட்டினை வீடு நோக்கிக் கொண்டு சென்றபோது வேலங்குளம் இராணுவ முகாமுக்கு அண்மையில் வீதிக்குப் பிரவேசித்த யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவத்தில் முன்னாள் கிராம அலுவலரான மோகனகாந்தி என்பவரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## நிதி மோசடி...

செய்யப்பட்டுள்ளார்.

இவர், 20 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தளபாடங்களைத் தருவதாகக் கூறி, வவுனியாவில் உள்ள நபர் ஒருவரை ஏமாற்றிப் பணத்தினைப் பெற்றுக் கொண்டுவிட்டு ஒரு மாத காலமாக தலைமறைவாக இருந்துள்ளார்.

இந்நிலையில் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெய மஹா தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கோண்டாவில் பகுதியில் வைத்து பொலிஸ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழில் பரவி...

டோஸ்பிரோசிஸ் எனச் சந்தேகிக்கப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஆனால் இரத்த மாதிரிகள் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதால் உறுதிப்படுத்தல் நிலுவையில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தேவையான...

ஆலோசனை வழங்கியுள்ளார்.

அடையாளம் காணப்படாத காய்ச்சல் காரணமாக நேற்று மாலை வரையில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக தேவையேற்படின் மாவட்டத்தின் ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலிருந்து ஆளணியினரைப் பெற்று பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆலோசனை வழங்கினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருமாக இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறையினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன், ஆளுநர் தொலைபேசியில் நேற்றுப் புதன்கிழமை மாலை கலந்துரையாடினார்.

உயிரிழப்புக்கான காரணம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் மாதிரிகள் கொழும்பு மற்றும் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எலிக்காய்ச்சலாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் வேறு வைரஸ் தொற்றுக்களாகவும் இருக்கக்கூடும் என்ற நியாயமான சந்தேகங்கள் இருப்பதாகவும் அது தொடர்பான விபரங்களையும் ஆளுநரிடம் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து இரண்டு குழுக்கள் நாளையும், நாளை மறுதினமும் வருகை தரவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்தக் காய்ச்சலுக்குரிய தடுப்பு மருந்துகள் வேறு மாவட்டங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டு விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், அதேபோன்று ஒரு தொகுதி மருந்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஆளுநர் இந்தத் தடுப்பு நடவடிக்கைகளை மருத்துவத்துறையினர் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளுவதாகக் குறிப்பிட்டதோடு, மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலால் பாதிப்புறாத ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவிலிருந்து மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களைப்பெற்று அவற்றை வினைத்திறனுடன் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார். (ம-7,33)

## யாழில் பரவும்...

எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழில் காய்ச்சல் மற்றும் சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் தற்போது சம்பந்தப்பட்ட காய்ச்சல் நோயாளிகளின் மாதிரிகளை எடுத்து பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த வருடம் 9,000 இற்கும் மேற்பட்ட எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருட காலப்பகுதியில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

நெல்விவசாயம் தொடர்பான சேறு மற்றும் நீர் தொடர்பான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எலிக் காய்ச்சலின் அறிகுறிகளான வாந்தி, தலைவலி, உடல் பலவீனம், சிறுநீரில் இரத்தம், சிறுநீர் கழித்தல் குறைதல் போன்றவற்றுடன் கடுமையான காய்ச்சல், கடுமையான தசைவலி மற்றும் கண் சிவத்தல் ஆகியவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அறிகுறிகள் தொடர்ந்தால், உடன் சிகிச்சையைப் பெறுவதன் மூலம் நோய் தீவிர நிலையை அடைவதைத் தடுக்கலாம், இல்லையெனில், சிறுநீரகம், கல்லீரல் மற்றும்மூளை உள்ளிட்ட உடல் உறுப்புகளுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்துவதோடு சில நேரங்களில் மரணம் கூட ஏற்படலாம் எனவும் எச்சரித்துள்ளார். (ம-7)

## ஆவரங்காலில்...

தவநாதன்(வயது-41) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்து யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பான விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் விபத்தில் முகம் மற்றும் வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயங்களினால் மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7)


මහජන සම්පත
திகதி 2024.12.11
சீட்டிழுப்பு இலக்கம் 5682
M 6 9 2 7 3 3
அத සම්පත M 2 7 3 3
சீட்டிழுப்பு இலக்கம் 257
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1712
X 05 43 52 82 X
Double Chance 85593

மெகா பவர்
திகதி 11/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2030
M 16 16 33 62 76
039824

லக்கி 7 VIP
திகதி 2024.12.11
சீட்டிழுப்பு இலக்கம் 508
J 2 8 9 3 4 9 J

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3924
சீட்டிழுப்பு திகதி 11.12.2024
N 12 44 47 62
N 120011

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.11
சீட்டிழுப்பு இலக்கம் 991
மேஷம் 30 40 47 51 மேஷம்
056993 48

சுப்பர் சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
11.12.2024 வெற்றி வாரம் 390
B 3 4 8 8 8 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,064,030.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2656
சீட்டிழுப்பு திகதி 2024.12.11 தினம் புதன்கிழமை
18 21 38 39 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,328,203.20

சனிதா
11.12.2024 வெற்றி வாரம் 4817
11 44 47 66 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,044,656.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4368
சீட்டிழுப்பு திகதி 11.12.2024 தினம் புதன்கிழமை
18 21 52 60 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,098,178.80

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 03 09 36 41 71
1832 11.12.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,923,294.60

ஜயோதா Jayoda
2024.12.11 வெற்றி வாரம் 2085
16 49 57 62 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,759,076.40

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2482
சீட்டிழுப்பு திகதி : 2024.12.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,438,971.20
05 20 43 54 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1777)

**076 825 7716** (ஆகாஸ்)


# இளைஞன் கைது

சமூக வலைத்தளங்களில் நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வெளியிட்ட 19 வயது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முந்தலம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தலுஓயா பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.(ம-7)


**மொத்தக் கொள்வனவு**

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (23)

**ஹப்பி சூப்பர்மாக்கட்**
உரும்பிராய்
48/= ~~90/=~~
**077 773 0900**


# கண்ணீர் அஞ்சலி



## திரு. நாகலிங்கம் கிருஷ்ணகுமார்

(புலோலி தெற்கு, உபய கதிர்காமம்)

எமது ஆலய மகா சபை உறுப்பினரும் தேர்த்திருவிழா உபயகாரருமாகிய திரு. நாகலிங்கம் கிருஷ்ணகுமார்(புலோலி தெற்கு, உபய கதிர்காமம்) அவர்கள் 10.12.2024 ஆம் திகதி கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1775)

**வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,**
**துன்னாலை வடக்கு, புலோலி.**


**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1776)

**விசாக்கான (Show money)**
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு: (620)
**075 033 6759**

**சிறிராம் ஜுவல்லர்ஸ்**



புத்தாண்டை முன்னிட்டு
தங்க ஆபரணங்களுக்கான
விசேட சலுகை


22 கரட் தங்க ஆபரணங்களுக்கான
செய்கூலி சேதாரத்தில் 20% - 50%
வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும்
தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-1772)

**077 165 1729, 077 773 0567, 021 222 8334**


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 - 05 - 1944 | 09 - 12 - 2024 |

## தம்பையா தங்கராஜா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தங்கராஜா அவர்கள் நேற்று முன்தினம் (09.12.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமளவல்லி (குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும் காசினி, தரணீதரன், பிரியதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன், விஸ்ணுகா, ஜெசிந்து ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஸ், தருண், அயிரா, மெல்லினா, ஜெயனன், அஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சுப்பிரமணியம், நடராஜா மற்றும் இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய தபாற் கந்தோர்,
சித்தன்கேணி.

தகவல்: குடும்பத்தினர்.
077 9124 042, 078 2661 014

(C-1778)

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
(2தீ மோத்தேயு 4:7)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை நந்தபாலா

(ரம்மிஸ் பொட் பந்தல் சேவை – உரிமையாளர்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.11.1969 | 10.12.2024 |

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நந்தபாலா அவர்கள் கடந்த 10.12.2024 செவ்வாய்க்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் கேசவராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் யசோதரா (ஊழியர் - யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் ரம்மியபாவு (ரம்மிஸ்பொட் உரிமையாளர்), நந்துஜன் (மாணவன் Northern Uni) அவர்களின் பாசமிகு தந்தையும் உதயகலா(ஜேர்மன்), காலஞ்சென்ற உதயசிறி மற்றும் குகபாலா(அமெரிக்கா), காலஞ்சென்ற ஸத்தியபாலா, விஜயபாலா(ஆசிரியர்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம்(ஜேர்மன்), காலஞ்சென்ற மன்மதராஜன் மற்றும் ராஜினி(அமெரிக்கா), சர்மிளா, அகிலன்(யா/மாநகரசபை ஊழியர்), விமலன், காலஞ்சென்ற கோகுலன் மற்றும் சுனித்திரா (ஆசிரியர் - யா/பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் திவ்யா (ஜேர்மன்), மதீசன், திபோசன், சியாம்சன், அதிசயன், பண்பொளி, கதிரொளி, லக்சயா ஆகியோரின் மாமனாரும் லக்சன்யா, ஜித்தேஷ்பாலா, டனோஜிதன், தனுசிகன், நிரோஜிகா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை 13.12.2024 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் இல.21, வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நல்லூர் பரியோக்கோபு ஆலய சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரியாலை.

(2738)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.